# தினகரன்

ஒரு புதிய அனுபவம்




வர்ணம் படத்துக்கு ஒரே ஷாட்டில் பாடல் 12



50 நாள் சிறையில் இருந்த சிறுமி விடுதலை 8



இன்றைய தினகரன் 18 + 8 26 பக்கங்கள்

ஆன்மிக சிறப்பு மலர் இணைப்பு


சென்னை • சனி, நவம்பர் 22, 2008

• சென்னை • புதுவை • வேலூர் • சேலம் • கோவை • திருச்சி • மதுரை • நெல்லை • நாகர்கோவில் • பெங்களூர் • மும்பை




மோனிகா

# வர்ணம் படத்துக்காக ஒரே ஷாட்டில் பாடல்

சென்னை, நவ. 22: தமிழ் சினிமாவில் புதுமையான முறையாக, ஒரு ஷாட்டில் ஒரு பாடலை படமாக்கி உள்ளனர்.

அல்கா பிலிம் கார்பரேஷன் வழங்கும் படம் 'வர்ணம்'. புதுமுகங்கள் ஹரி, அஸ்வதா ஜோடியாக நடித்துள்ளனர். மற்றும் மோனிகா, சம்பத் உட்பட பலர் நடித்துள்ளனர். ராஜூ இயக்கி உள்ளார்.

படம் பற்றி இயக்குனர் ராஜூ கூறியதாவது:

ஜாதி உணர்வால் பாதிக்கப்படும் பள்ளி மாணவனின் வாழ்க்கை தான் படத்தின் கதை. இதில், மோனிகா டீச்சராக நடித்துள்ளார். சம்பத் வில்லன். சின்னாளப்பட்டியை சேர்ந்த வாலிபால் பிளேயர் கிரி, இந்த கதைக்கு பொருத்தமாக இருந்தார். அவரை ஹீரோவாக்கி விட்டோம். அஸ்வதா சென்னையை சேர்ந்தவர். படத்தில் கிராமத்து பெண்ணாக அவரை மாற்றியிருக்கிறோம். இந்தப் படத்துக்காக பார்ட்டி பாடல் ஒன்றை வித்தியாசமான முறையில் படமாக்க நினைத்தோம். ஒரே ஷாட்டில் மூன்றரை நிமிட பாடலை படமாக்க முடிவு செய்தோம். இதற்காக, நடன இயக்குனர் தினா தலைமையில் ஒத்திகை நடத்தப்பட்டு படமாக்கினோம். ஒளிப்பதிவாளர் பிரேம்குமார் கேமராவை சுமந்துகொண்டு இதை படம் பிடித்தார்.

இவ்வாறு ராஜூ கூறினார்.